(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2024

| | | |
|---|---|---|
| **புவியியல்**<br>**Geography** | **Three Hours**<br>**Gr -12 (2025)** | **22** **T** **I,II** |

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் அ, ஆ, இ என மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி – I

1. இலங்கையின் 1:50,000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படங்களில் தாள்களின் எண்ணிக்கை.
   (1) 72 (2) 82 (3) 92 (4) 102 (5) 104
   (.............)

2. இலங்கையின் மாவட்ட அடிப்படையிலான நெற்செய்கைப் பரம்பல் ஒரு
   (1) இடம் சார்ந்த தரவாகும். (2) பண்புத் தரவாகும். (3) பச்சைத் தரவாகும்.
   (4) முதல்நிலைத்தரவாகும். (5) இடம் சாராத தரவாகும். (.............)

3. இடரீதியான, காலரீதியான நிலத்தோற்றப்பாடுகளை முன்வைப்பதற்குப் பயன்படும் உபகரணம்
   (1) செய்மதிப்படிமங்கள் (2) விமான ஒளிப்படங்கள் (3) வரைபுகள்
   (4) புள்ளிவிபர நுட்பங்கள் (5) படம் (.............)

4. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படங்களில் நிர்வாக எல்லைகளைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்.
   (1) கறுப்பு (2) சிவப்பு (3) மஞ்சள் (4) பச்சை (5) கபிலம்
   (.............)

5. புவியியல் தரவுகளை எண்ணிலக்க முறையாக மாற்றி கணினிக்கு உள்ளீடு செய்வதற்குப் பயன்படுகின்ற உள்ளீட்டு மூலகங்களில் ஒன்று
   (1) திரை (2) சுட்டி (3) அச்சு உபகரணம்
   (4) காந்த இறுவட்டு (5) ஒளிப்படம். (.............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

6. பௌதிகச் சூழலைத் துரிதமாக மாற்றத்திற்கு உள்ளாக்குகின்ற இரு இயற்கை நிகழ்வுகள்
   (1) சூறாவளி, சுனாமி (2) வெள்ளப்பெருக்கு, காட்டுத் தீ
   (3) புவிநடுக்கம், எரிமலை வெடிப்பு (4) சூறாவளி, எரிமலை வெடிப்பு
   (5) காட்டுத்தீ, புவி நடுக்கம். (.............)

7. புவிமேற்பரப்பில் புறவிசைக் கருவிகளால் உருவாகும் நிலவுருவங்கள்
   (1) மூன்றாம் வகை நிலவுருவங்கள்
   (2) முதலாம் வகை நிலவுருவங்கள்
   (3) இரண்டாம் வகை நிலவுருவங்கள்
   (4) முதலாம், இரண்டாம் வகை நிலவுருவங்கள்
   (5) மூன்றாம், இரண்டாம் வகை நிலவுருவங்கள் (.............)

8. சூரியனில் இருந்து வருகின்ற புற ஊதாக்கதிர்களை உறிஞ்சி வளி வெப்பமடைவதற்குக் காரணமாக அமைகின்ற வாயு
   (1) மீதேன் (2) காபனீரொட்சைட் (3) நைதரசன்
   (4) ஓசோன் (5) ஒட்சிசன் (.............)

9. மண் உருவாக்கத்தில் பிரதான இடத்தினைப் பெறும் காரணி
   (1) தரைத்தோற்றம் (2) காலநிலை (3) தாய்ப்பாறை
   (4) காலம் (5) மனிதசெயற்பாடுகள் (.............)

10. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?
   (1) பசுபிக் சமுத்திரம் (2) அத்திலாந்திக் சமுத்திரம் (3) ஆட்டிக் சமுத்திரம்
   (4) இந்து சமுத்திரம் (5) அந்தாட்டிக் சமுத்திரம் (.............)

11. பின்வருவனவற்றிலிருந்து கிராமப் பகுதியின் பண்பினைத் தெரிவு செய்க.
   (1) சேவை நிலையங்கள் அதிகம்.
   (2) சனத்தொகை அதிகம்
   (3) விவசாய நிலங்கள் அதிகம்
   (4) கைத்தொழில் நடவடிக்கைகள் அதிகம்
   (5) வீதி வலைப்பின்னலின் நெருக்கம் அதிகம். (.............)

12. இலங்கையின் உலர் வலயத்தில் அதிகளவில் செய்கை பண்ணப்படும் பயிர்
   (1) தேயிலை (2) கோப்பி (3) இறப்பர் (4) நெல் (5) தென்னை
   (.............)

13. குடித்தொகையில் இறப்பு வீதம், பிறப்பு வீதம் குறைவாக இருத்தல், ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல் என்பவற்றினால் ஏற்படும் விளைவு
   (1) முதியோர் தொகை அதிகரிக்கும்
   (2) பெண்கள் தொகை அதிகரிக்கும்
   (3) சிறுவர் தங்கிவாழும் தொகை அதிகரிக்கும்
   (4) உழைப்பாளர் படை அதிகரிக்கும்
   (5) மந்த போசணை அதிகரிக்கும் (.............)

14. இடப்பெயர்வினை ஏற்படுத்துகின்ற தள்ளுவிசைக் காரணியை பின்வரும் விடைகளில் இருந்து தெரிவு செய்க.
   (1) சுதந்திரம் (2) உவப்பான காலநிலை (3) உட்கட்டுமான வசதி
   (4) போக்குவரத்து விருத்தி (5) தொழிலின்மை (.............)

15. இலங்கையின் சனத்தொகை அதிகளவில் பரம்பியுள்ள காலநிலை வலயம்
   (1) தாழ்நில உலர்வலயம் (2) மலைநாட்டு உலர்வலயம்
   (3) தாழ்நில ஈரவலயம் (4) அரைகுறை வரள் வலயம்
   (5) மலைநாட்டு ஈரவலயம் (.............)

($15 \times 1 = 15$ புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

❖ **அறிவுறுத்தல்கள்**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் 1 : 50,000 அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப் படமும் வழங்கப்படும்.

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50,000 அளவுதிட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. சமவுயரக் கோடுகள் 20 மீற்றர் இடைவெளியில் காட்டப்பட்டுள்ளது. இப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு
- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.
- உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்.

1. (i) சதுரம் A யில் உள்ள நிர்வாக எல்லையைப் பெயரிடுக. (01 புள்ளி)
   (ii) சதுரம் P யில் காணப்படும் நான்கு போக்குவரத்து வீதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (iii) சதுரம் P யில் செய்கை பண்ணப்படுகின்ற பெருந்தோட்டப்பயிர்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
   (iv) படப்பிரதேசத்தின் கிழக்கு அரைப்பகுதியில் குடியிருப்புப்பரம்பலை வரையறுத்துள்ள இரண்டு காரணிகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (v) (a) சதுரம் B யில் காணப்படும் ஆற்று நிலவுருவத்தினைப் பெயரிடுக. (01 புள்ளி)
   (b) C – D கோடு வழியே காணப்படும் நிலவுருவம் யாது? (01 புள்ளி)
   (vi) படப்பிரதேசத்தில் பெருந்தோட்டப் பயிர்கள் தவிர்ந்து செய்கை பண்ணப்படும் பயிர்கள் நான்கினை இனம் காண்க. (02 புள்ளிகள்)
   (vii) படம் பிரதேசத்தின் தரைத்தோற்றத்திற்கும் போக்குவரத்து வலைப்பின்னலுக்குமிடையே காணப்படும் இடைத்தொடர்புகளை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

2. தரப்பட்ட உலகப் புறவுருவப் படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

| | |
|---|---|
| (i) றொக்கி மலைத்தொடர் | (ii) பரானா பராகுவே நதி |
| (iii) சகாரா பாலை வனம் | (iv) கிறீன்விச்கோடு |
| (v) கஸ்பியன் கடல் | (vi) தாஸ்மானியாதீவு |
| (vii) டோக்கியோ | (viii) தித்திக்காகா ஏரி |

(ix) பருமட்டான பிறப்பு வீதம் உயர்வாகக் காணப்படும் ஆபிரிக்க நாட்டின் தலைநகரம்
(x) 2024 இல் சர்வதேச மனித உரிமைகள் மகா நாடு நடைபெறவுள்ள நாடு.

($10 \times 1 = 10$ புள்ளிகள்)

## பகுதி – III

### “அ” செய்முறைப் புவியியல்

1. (i) புவியியல் தகவல் முறைமை என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) புவியியல் தகவல் முறைமையில் தரவுகளின் வகைகளை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) புவியியல் தகவல் முறையின் முக்கியத்துவத்தினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (04 புள்ளிகள்)
   (iv) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் மூன்று பிரிவுகளையும் பெரிடுக. (03 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

2. (i) இடவிளக்கப்படம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) இடவிளக்கப்படங்களின் பயன்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் 1:50,000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தில் கீழே A,B,C எனத்தரப்பட்டவற்றினை வரைந்து காட்டுவதற்குப் பயன்படுகின்ற நிறங்களை முறையே தருக.

A – அமைக்கப்பட்ட பிரதேசம்

B – பாதுகாக்கப்பட்ட வன எல்லை

C – மணற்குன்று (03 புள்ளிகள்)

(iv) (a) கருப்பொருள் படம் என்பதனால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)

(b) கருப்பொருள் படங்கள் தயாரிக்கப்படுகின்ற மூன்று முறைகளைத் தருக. (03புள்ளிகள்)

## 'ஆ' பௌதிகப் புவியியல்

3. (i) தொகுதி என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) புவித்தொகுதிகளுக்கு இடையிலான இடைத்தொடர்பினை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) (a) வளிமண்டலத்தின் பிரதான படைகளைக் காட்டும் மாதிரிப்படம் ஒன்றினை வரைந்து படைகளைப் பெயரிடுக.

(b) அப்படைகளின் இயல்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) கற்கோளம் மாசடைவதில் செல்வாக்குச்செலுத்துகின்ற மூன்று மானிட நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) புவிமேற்பரப்பில் காணப்படும் பிரதான தகடுகள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) தகடுகள் அசைவிற்கு உள்ளாகின்ற மூன்று முறைகளை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) தகட்டு அசைவினால் ஏற்படுகின்ற மூன்று விளைவுகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) தள்ளல் தீப்பாறை நிலவுருவங்கள் மூன்றினை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

## 'இ' மானிடப் புவியியல்

5. (i) உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய நான்கு பிரதேசங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) குடித்தொகைப் பரம்பலைப் பாதிக்கின்ற மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இடப்பெயர்வாளர்களால் சென்றடையும் நாடுகளில் ஏற்படுகின்ற மூன்று விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) உலக சனத்தொகையில் முதியோர் தொகை அதிகரிப்பதனால் ஏற்படும் மூன்று பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

6. (i) இலங்கைக் குடித்தொகையின் சமனற்ற பரம்பலுக்குக் காரணமான நான்கு காரணிகளைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையின் சனத்தொகை கூடிய பிரதேசத்தில் இருந்து, சனத்தொகையைப் பரவலடையச் செய்வதற்கு அரசு மேற்கொண்ட மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடக்கூடிய அளவிற்கு இலங்கையின் குடித்தொகையில் காணப்படுகின்ற மூன்று பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) குடித்தொகையில் சிறுவர்தங்கி வாழ்வோர் தொகை அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற மூன்று விளைவுகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

**தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நடாத்தும் முதலாம் தவணைப் பரீட்சை - 2024**

**தரம் 12 (2025) புவியியல்** படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)

